*ஜூலை 15, 2024*

*அன்பான உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களே*
***நிதியாண்டுக்கான உறுதிமொழி (ஆகஸ்ட் 2024 முதல் ஜூலை 2025 வரை)***

*இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்*

*தேவனுடைய திருச்சபையான KKMC-யின் ஊழியத்திற்காக, அவருடைய நடத்துதலை நாடும் புதிய நிதியாண்டை, நாம் எதிர்பார்க்கிறோம்,*

*[17] நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்;*
*[18] நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். （வெளி 3:17-18）*

*நம்முடைய ஊழிய தேவைகளுக்கு, இந்த புதிய நிதியாண்டை தேவன் பூர்த்திச் செய்வார் என்று அவரை எதிர்ப்பார்துக்கொண்டிருக்கும் வேளையில், மேலே குறிக்கப்பட்டிருக்கும் வேத பகுதி மெய்யான செல்வம் என்ன என்பதை நம்மக்கு தெளிவு கொடுக்கிறது. லவோதிக்கேயா திருசபை சரியான இடத்தில் அமைந்திருந்தது. ஐரோபா ஆசியாவுடன் நெடுஞ்சாலை மார்க்கமாக இணைக்கப்பட்டிருந்தது. ஆடைகளுக்கான உயர்தர கம்பளி மற்றும் கண்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான தனித்துவம்வாய்ந்த தைலம் அல்லது களிம்பு ஆகியவற்றை உதவும் வங்கிகள் காணப்படும் நகர மையமாகவும் பணக்காரர்கள் வாழும் பட்டிணமாகவும் இருந்தது.*

*லவோதிக்கேயா திருச்சபை மிகவும் செழிப்பாக இருந்தது. ஆனால் தன்னிறைவின் பெருமையினால், அவர்களின் கண்கள் மறைக்கப்பட்டு, அவர்களின் நிர்வாணத்தை வெளிப்படுத்தி, அவர்களை மீண்டும் வறுமையில் தள்ளியது. ஏழ்மையானவர்கள், பரிதாபமானவர்கள, குருடர்கள் மற்றும் நிர்வாணமானவர்கள் என்று இயேசு அவர்களைக் கடிந்துகொண்டபோது பணக்காரராக இருப்பதற்கான ஆசீர்வாதம் ஒரு சாபமாக மாறியது. இதை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று இயேசுவின் இறுதி நாளில் திருச்சபைக்கு விடுத்த கடுமையான எச்சரிக்கை இது.*

*ஆனால் உண்மையான செல்வம் அவரில் மட்டும் காணப்படுகின்றது என்பதையும் கர்த்தர் திருச்சபைக்கு நினைவூட்டினார். எனவே, நமது பூமிக்குரிய செல்வத்தைப் பயன்படுத்தி,*
*இயேசுவிடம், அழிவில்லா சுத்திகரிக்கப்பட்ட பொக்கிஷத்தை பெற்றுக்கொள்வோம்.*
*திருச்சபையின் உண்மையான செல்வம், கடவுளின் நித்திய நோக்கத்திற்காக நமது பூமிக்குரிய செல்வத்தை பரலோக பொக்கிஷமாக கடவுளுக்கென்று செலவு செய்வதாகும்.*

*கடந்த இரண்டு வருடங்களாக திருச்சபையின் நிகர வருவாயை தீவிரமாகப் பார்க்கும்போது, பற்றாக்குறையுடன் போராடி வருவதை நான் கவனித்தேன். ஆனால் உண்மையான செல்வத்திற்காக தேவனை நோக்கி நாம் பார்க்கும்பொது அதைக் நம்மால் கடக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.*

**"ஒன்றாக நாம் வளர்ந்து + சேவை செய்வோம்"** *என்ற கருப்பொருளில் நமது திருசபை தொடர்வதால், அதிசயிக்கத்தக்க வகையில், அதிக ஊழிய வாய்ப்புகளும் உருவாகியுள்ளன. முதியோர்களுக்கான கம்போங் குடும்ப பாசம் (KFA), சமூகத்திற்கான ஐந்து அப்பங்க்கள் இரண்டு மீன்கள் திட்டம் (P5L2F), வேகமாக வளர்ந்து வரும் மியான்மர் மொழி ஊழியம், இளைய தலைமுறையினருக்கான துதி ஆராதனை கூடுகை, வாம்போ குடும்ப மையத்தில் செய்து வரும் சிறுவர்களுகான ஊழியங்கள் மற்றும் பாத்தாம் தீவில் ஊழியம் @ ஆகியவை இதில் அடங்குவதாகும். பற்றாக்குறையின் காரணமாக இந்த ஊழியங்களை நாம் தொடர்ந்து செய்யமுடியாவிட்டால், அது மிகவும் வருந்தத்தக்கது. எனவே, புதிய நிதியாண்டை (ஆகஸ்ட் 2024 முதல் ஜூலை 2025 வரை) நாம் நெருங்கும்போது, கடவுளின் மகிமைக்காக நம்முடைய பொருளாதாரத்தினால், பரலோக செல்வத்திற்க்காகதேவனோடு பரிவர்த்தனை செய்ய ஒன்றிணைவோம்.*

*விசுவாசத்தோடு திருசபை தலைவர்கள் FY24/25 வரவு-செலவு பட்டியல்{பட்ஜெட் }$3.98 மில்லியனை நமது திருச்சபையின் ஊழியங்கள் மற்றும் திருபணிகளுக்கு ஆதரவளித்துள்ளனர். 24/25க்கான வரவு-செலவு பட்டியல் {பட்ஜெட} ஒதுக்கீட்டை இந்தக் கடிதத்தின் பக்கம் 2 இல் காணலாம். நமது திருச்சபையின் நிதித் தேவைகளுக்கான கடவுளின் ஊழியங்களுகாக நாம் தொடர்ந்து அவரை விசுவாசிப்போம், நாம் ஒவ்வொருவரும் நமது வாக்குறுதி காணிக்கைகளுடன் நமது பங்கைச் செய்வோம்.*

***ஆகஸ்ட் மாதம் -4 தேதி 2024*** *அன்று உறுதிமொழி ஞாயிறாக அனுசரிக்கிறோம். நீங்கள் ஜெபத்துடன் உங்கள் வாக்குறுதி காணிக்கையை கொடுத்து வாக்களிக்கும் போது, தயவுசெய்து நீங்கள் பூர்த்தி செய்த வாக்குறுதி அட்டையை ஆலய அலுவலகத்திற்கோ, காணிக்கை பையிலோ செலுத்தவும் அல்லது www.kkmc.org.sg/give -க்கு* ***ஆகஸ்ட் 31-ம் தேதி 2024****க்குள் பூர்த்தி செய்யது அனுப்பலாம்.*

*உங்கள் வருமானத்தில் 10% தசமபாகம் செலுத்துவது, நல்ல ஓர் வழிகாட்டியாக நீங்கள் கருதலாம். ஆண்டு முழுவதும் கடவுள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் ஆசீர்வதிக்கும் போதெல்லாம், கடவுளுக்கு நன்றி செலுத்தும் வகையில் திருச்சபைக்கு கொடுப்பதை ஒரு காணிக்கையாகக் கருதுமாறு ஜெபத்துடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*கீழ்க்கண்டவகையில் நமது வாக்குறுதி காணிக்கையை ஜெபத்துடன் வழங்கலாம்:*

*a) கம்போங் கபூர் மெதடிஸ்ட் திருச்சபையின்* ***OCBC*** *கணக்கிற்கு* ***இணைய வங்கிச் சேவை - "Kampong Kapor Methodist Church"****; வங்கிக் குறியீடு/கிளைக் குறியீடு: 7339 / 695 – A/c எண்:* ***695457721001****; மற்றும் 'குறிப்பு' இடத்தில், உங்கள் பெயர் மற்றும் நிதி பரிமாற்றத்தின் நோக்கத்தைக் குறிப்பிடவும் (உ.ம்.* ***உறுதிமொழி காணிக்கை- P, இதற காணிக்கை- O, நன்கொடை- D*** *போன்றவை)*

*b) b. KKMC இன் UENக்கு* ***PayNow: S87CC0537K****, மற்றும் திருச்ஸ்பக்யின் பெயர் 'Kampong Kapor Methodist Church' உங்கள் பெயர் மற்றும் நிதி பரிமாற்றத்தின் நோக்கம்(உ.ம்.* ***உறுதிமொழி காணிக்கை-P, இதற காணிக்கை- O, நன்கொடை- D*** *போன்றவை) "குறிப்புகள்" என்பதன் கீழ் குறிப்பிடவும்.*

*c)* ***கிராஸ் காசோலை*** *எழுதி* ***"Kampong Kapor Methodist Church" , 1 Kampong Kapor Rd, Singapore 208673*** *என்ற விலாசத்திற்கு அஞ்சல் அனுப்பலாம், காசோலையின் பின்புறம், உங்கள் பெயர், தொலைபேசி எண் மற்றும் பணம் செலுத்தியதன் நோக்கம் (உ.ம்.* ***உறுதிமொழி காணிக்கை-P, இதற காணிக்கை- O, நன்கொடை- D*** *போன்றவை)*

*நிதி பரிவர்த்தனை செய்யப்பட்டதற்கான ரசீதை மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ அடுத்த மாதத்திலேயே உங்களுக்கு ஆலயத்திலிருந்து அனுப்பப்படும்.*


*ஆலயத்தில் நேரடி ஆராதனைகளில் கலந்துகொள்பவர்கள், உங்களின் வாக்குறுதி காணிக்கைகளை நிறைவேற்ற, ஆலய நுழைவாயிலில் உள்ள காணிக்கை பெட்டிகளில் செலுத்தலாம். நேரலையில் கலந்துகொள்பவர்கள், மேலே குறிப்பிட்டுள்ள 3 கட்டண முறைகளில் ஏதேனும் ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம்.*

*தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க, வாக்குறுதி காணிக்கை அட்டையில் கையொப்பமிட உறுப்பினர்கள்/நண்பர்கள் மற்றும் உங்களது துணைவியார் (வாக்குறுதி காணிக்கையை இணைத்தால்) அல்லது நேரலை படிவத்தை (மேலே சுட்டிக்காட்டப்பட்டபடி) பூர்த்தி செய்து திருசபை நேரில் உங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள சேகரிக்க அல்லது வெளியிட அங்கீகாரம் அளிக்க வேண்டும். FY24/25க்கான வாக்குறுதிகள் தொடர்பான ஆலயத்தின் பதிவுகளைப் பராமரிக்கும் மற்றும் புதுப்பிக்கும் நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவு. உங்கள் வாக்குறுதி காணிக்கை கண்டிப்பாக ரகசியமாக இருக்கும் என்பதை உறுதி செய்து கொள்கிறோம்.*

கடவுள் நம் அனைவருக்கும், நம் அன்புக்குரியவர்கள் மீதும் அவருடைய கிருபையையும், கருணையையும், தொடர்ந்து உங்களுக்கு வழங்குவாராக.

நமது இறைவனின் சேவையில்

| | | |
|---|---|---|
| Rev Tay Kay Leong | Mr Tanguy Lim | Mr Adrian Chan |
| Pastor-in-charge | LCEC Chairperson | Finance Committee Chairperson |




*"[7] அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.*

*[8] மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்."*

*2 கொரிந்தியர் 9: 7-8*